**மீட்சிபெறுகின்ற பிராந்தியங்களை இலக்காக கொண்ட அடிப்படை சமூக சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டம் - 2015**

---

மீட்சிபெறுகின்ற பிராந்தியங்களை இலக்காக கொண்ட அடிப்படை சமூக சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவருக்குமிடையே (ஜேஐசீஏ) கைச்சாத்திடப்பட்ட 2012 மார்ச் 28 ஆம் திகதிய எஸ்எல்பி– 105 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4(6) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

மீட்சிபெறுகின்ற பிராந்தியங்களை இலக்காக கொண்ட அடிப்படை சமூக சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நிதி அமைச்சின் தேசிய திட்டமிடல் திணைக்களமாகவிருந்த தற்போதைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவுள்ளதுடன் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு மற்றும் கிழக்கு, வடமேல், மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைகள் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. சுகாதார மற்றும் மருத்துவ முறைமையை முன்னேற்றுதல் மற்றும் இரண்டாம் நிலை வைத்தியசாலைகள் மற்றும் அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் என்பவற்றில் வசதிகள் மற்றும் உபகரணங்களை முன்னேற்றுவதனூடாக அத்தியாவசிய மருந்துகளின் உற்பத்தி இயலளவை பலப்படுத்துதல் அதன் மூலம் தொற்றல்லாத நோய்கள் முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 6,332 மில்லியனிற்குச் சமனான ஜப்பான் யென் 4,760 மில்லியனானதுடன், அதில் ரூபா 5,155 மில்லியனிற்கு சமனான ஜப்பான் யென் 3,935 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2012 யூலை 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 யூலை 23 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை

பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டில் முறையே மேற்கொள்ளப்பட்ட ரூபா 776,071 மற்றும் ரூபா 232.37 மில்லியன் நேரடிக் கொடுப்பனவுகள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. ஆகையால், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன் மற்றும் சிவில் வேலைகளின் மீதிகள் அதே தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 3,935 | 5,155 | 1,530 | 628 | 692 | 1,663 | 2,018 |
| இலங்கை அரசாங்கம் | 825 | 1,177 | 310 | 108 | 132 | 253 | 370 |
| மொத்தம் | 4,760 | 6,332 | 1,840 | 736 | 824 | 1,916 | 2,388 |

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம், பாதீட்டு மதிப்பீடுகளில் மீளாய்வாண்டிற்காக ரூபா 1,530 மில்லியன் தொகை ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 692 மில்லியன் தொகை மாத்திரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால், மீளாய்வாண்டின் போது செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டை பயன்படுத்துவதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என இது சுட்டிக்காட்டியது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், வறகபொல, கல்கமுவ, தெல்டெனியா மற்றும் களுவாஞ்சிக்குடியிலுள்ள ஆதார வைத்தியசாலைகளின் இயலளவுகளை முன்னேற்றுவதற்கும் அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி இயலளவுகளை முன்னேற்றுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் மீதான அவதானிப்புக்கள் கீழே காட்டப்படுகின்றன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 514 மில்லியன் கிரயத்திலான வறகபொல ஆதார வைத்தியசாலைக்கான 06 அடுக்குமாடி சிகிச்சை கட்டிடம் மற்றும் 02 அடுக்குமாடி வதிவிடக் கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் 2015 யூன் 20 அளவில் பூர்த்தியாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், கட்டிடங்களின் நிர்மாண வேலைகளின் பௌதீக முன்னேற்றம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 86 சதவீதத்தில் இருந்தது. செயற்திட்ட பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட விளக்கத்தின் பிரகாரம், நிர்மாண வேலைகளானது பாதகமான காலநிலை, எதிர்பார்த்திராத நிலத்தள நிலைமை மற்றும் ஒப்பந்தக்காரரின் தவறுகள் காரணமாக குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பூர்த்திசெய்யப்பட முடியாதிருந்தது. மேலும், 2014 திசெம்பர் வரை வழங்கப்படுவதற்கு இணங்கப்பட்ட ஆலோசனை சேவைகளுக்கான காலப்பகுதியும் நிர்மாண வேலைகளிலுள்ள காலதாமதங்களால் 2016 பெப்ரவரி வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 6.13 மில்லியன் மேலதிக கிரயம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பொதி – I இன் கீழ் கல்கமுவ ஆதார வைத்தியசாலையின் தியேட்டர்கள் மற்றும் வார்ட் என்பவற்றிற்கான கட்டிட நிர்மாண வேலைகள் 2015 மே 30 இல் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், பொது மக்களின் பயன்பாட்டிற்காக உரிய தியேட்டர்கள் மற்றும் வார்ட்டுகள் 2016 பெப்ரவரி 29 வரையிலும் திறக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2014 ஒக்தோபர் 05 இல் ரூபா 239 மில்லியன்

கிரயத்தில் பொதி II இன் கீழ் வழங்கப்பட்ட வெளி நோயாளர் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவு என்பவற்றிற்கான கட்டிடங்களின் நிர்மாணம் மற்றும் வளிப் பதனாக்கி முறைமையினை நிறுவுதல் என்பன 02 சந்தர்ப்பங்களில் கால நீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தெல்டெனியா ஆதார வைத்தியசாலைக்கான 05 அடுக்குமாடி புதிய கட்டிடத்தின் நிர்மாணத்திற்காக 2015 ஆகஸ்ட் 06 இலிருந்து 02 சந்தர்ப்பங்களில் காலநீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 வரை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவுக்கான கட்டிடத்தை நீடித்தல் நிர்மாணம் மற்றும் கட்டிடங்களின் ஏனைய மீள்புனரமைத்தல் வேலைகள் 03 பொதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2015 யூன் 30 இல் உள்ளவாறு கணிசமானளவு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

(உ) செயற்திட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 04 வைத்தியசாலைகளுக்கான உயிரியல் மருத்துவ உபகரணங்களின் கொள்வனவுக்காக ரூபா 768.36 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இது 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்படுவதற்கு வேண்டப்பட்டிருந்தது. எனினும், தெல்டெனியா மற்றும் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைகளுக்கான உயிரியல் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மாகாண சுகாதார அதிகாரசபைகள் 2016 பெப்ரவரி 10 இலேயே உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்தன. வறகாப்பொல மற்றும் கல்கமுவ ஆதார வைத்தியசாலைகளுக்கான உயிரியல் மருத்துவ உபகரணங்களின் கொள்வனவிற்காக மாகாண சுகாதார அதிகாரசபைகளால் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு 2015 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி இயலளவை பலப்படுத்தல் மீதான 50 சதவீதமான அபிவிருத்தி வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,493 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், செயன்முன்னேற்ற அறிக்கைகளானது உரிய வேலைகள் ஆரம்ப கட்டங்களிலேயே இருந்தன என சுட்டிக்காட்டியது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

வறகாபொல ஆதார வைத்தியசாலையிலுள்ள நிர்மாண வேலைகளின் மூல அளவீட்டுப்பட்டியல்கள் கடன் உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தின் நிர்மாணத்திற்கான சில அவசியமான தேவைப்பாடுகள் உதாசீனப்படுத்தப்பட்டது. ஆகையால், பாதுகாப்பு முறைமை, வைத்திய எரிவாயு முறைமை, 02 மேல் அடுக்குமாடித் தளங்களின் மாபிள் பதித்தல் வேலைகள், வதிவிட கட்டிடத்திற்கான உட்கூரை வேலைகள் மற்றும் மாடிப் படிக்கட்டுகளின் இரும்புக்கைப்பிடி வேலைகள் என்பவற்றினை ஸ்தாபித்தல் போன்ற வேலைகள் மூல அளவீட்டு பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்துவதன் மூலம் அத்தகைய வேலைகளை பூர்த்திசெய்வதற்கு ரூபா 55.44 மில்லியன் கிரயத்தில் ஏனைய ஒப்பந்தகாரர்களுக்கு தனிப்பட்ட ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக, வைத்தியசாலைக்கான நுழைவு வீதிகளின் புனரமைப்பு வேலைகள் ஏனைய ஒப்பந்தக்காரர்களுடாக ரூபா 30.15 மில்லியன் கிரயத்தில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மேலும் வளிப்பதனாக்கி முறைமை படுக்கை மின்தூக்கியை நிறுவுதல் மற்றும் வடிகாலமைப்பு சுத்திகரித்தல் பொறி என்பவற்றிற்கான மூல அளவீட்டுப் பட்டியலில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 85.54 மில்லியன் கூட்டுத்தொகையான ஏற்பாட்டு ஒதுக்கீடுகள் வேறு ஒப்பந்தகாரர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 23.44 மில்லியன் மேலதிக கிரயம் செலவிடப்பட்டிருந்தது.